# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2207 - 2020 දෙසැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2020.12.18

*2207 ஆம் இலக்கம் – 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | – |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | – |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | *1916* |
| ஆய விற்பனையும் குத்தகையும் | – |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | *1918* |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | – |
| ஏல விற்பனைகள் | *1920* |
| நானாவித அறிவித்தல்கள் | – |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, சனவரி மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1951 - B 82087 - 405 (2020/12)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் -மட்டக்களப்பு

பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2020.12.29 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம்மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்கு பற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

ஏ. சீ. ரிஸ்வான்,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
மட்டக்களப்பு,
2020.12.04.

### ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப்பொருட்களின் விபரம்

| தொ. இல. | வழக்கிலக்கம் | வாகன பதிவு இல. | சான்றுப்பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | B/152/20 | EP JY-3881 | முச்சக்கர வண்டி | 01 |
| 2 | 58382/PC/19 | EP BDV-1989 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 3 | 55937/MT/19 | EP BDW-8038 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) | 01 |
| 4 | 61512/MT/20 | 49CC | மோட்டார் சைக்கிள் | 01 |
| 5 | 60881/E/20 | EP BH0-0824 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 6 | 59725/MT/20 | EP GT-4103 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 7 | 60193/MT/20 | EP HZ-0172 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 8 | 59867/MT/20 | EP GV-2612 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 9 | AR/613/20 | | தோணி | 01 |
| 10 | 55472/MT/18 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 11 | 56366/MT/l 9 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 12 | 48794/MT/l 7 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 13 | 31541/PC/14 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 14 | 53126/MT/18 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 15 | 39981/MT/16 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 16 | 44913/PC/17 | | துவிச்சக்கர வண்டி | 01 |

| தொ. இல. | வழக்கிலக்கம் | வாகன பதிவு இல. | சான்றுப்பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 17 | 53734/MT/18 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 18 | 42064/PC/16 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 19 | 38987/PC/16 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 20 | 57591/MT/19 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 21 | 4541O/MT/17 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 22 | 57186/MT/19 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 23 | AR/649/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 24 | 8/616/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 25 | AR/431/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 26 | 62299/S/20 | | சவள் | 02 |
| 27 | 62106/S/20 | | சவள் | 01 |

12-376

## ஏல விற்பனைகள்

### பிரதேச அபிவிருத்தி வங்கி

*2008 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 40 ஆவது வாசகத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கியினால் நடாத்தப்படும் ஏல விற்பனை*

களனிய நகரத்தில், சிங்ஹாரமுல்ல, எம். வீ. பெரேரா ஒழுங்கையில் அமைந்துள்ள 36.7 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய கைத்தொழிற்சாலைக் கட்டிடத்துடனான பெறுமதி மிக்க காணி.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், சியனே கோரளையில், அதிகாரி பத்துவில், களனிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் களனிய பிரதேச சபை அதிகார பிரதேசத்துக்குட்பட்ட சிங்காரமுல்ல கிராம அலுவலர் பிரிவில், களனிய என்ற கிராமம் அமைந்துள்ள போல வத்த என்றழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் எம். டபிள்யூ. டீ. எஸ். த சில்வா அவர்களினால் 1993.03.22 ஆந் திகதி அளவீடு செய்யப்பட்ட 2116 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 02 மற்றும் 03 ஆகிய இலக்க காணித்துண்டுகள் ஒன்றிணைக்கப்பட்டு உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. கே. ஏ. எஸ் பத்மினி என்பவரினால் 2013.04.29 ஆந் திகதி அளவீடு செய்யப்பட்ட 10277 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு A அடையாளமிடப்பட்ட சைபர் ஏக்கர் சைபர் றூட் முப்பத்தாறு தசம் ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 36.7பே.) அல்லது சைபர் தசம் சைபர் ஒன்பது இரண்டு ஆறு ஹெக்டயார் (0.926 ஹெக்.) விஸ்தீரணமான காணி மற்றும் அதில் அடங்கியுள்ள கட்டடங்கள், மரங்கள் மற்றும் பழ வகைகள் உட்பட அனைத்துடனான எல்லாம்.

"பிரதேச அபிவிருத்தி வங்கியின் சார்பில் "லிலானி", புத்பிடியவில் உள்ள விதான பெல்பிட்ட கோரளளாகே நிஷானி பிரியங்கனி விதான அவர்களினால் 2014.11.03 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 14785 ஆம் இலக்க ஈட்டு முறியின் கீழும், களனி, தளுகம, புனித பிரான்சிஸ் வீதி, இலக்கம் 23/ 9A எனும் முகவரியில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு திருமதி ருஷங்கா சமரநாயக்க அவர்களினால் 2015.07.03 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 722 ஆம் இலக்க ஈட்டு முறியின் கீழும், மேலும் அதே களனிய, தலுகம, புனித பிரான்சிஸ் வீதி, இலக்கம் 23/ 9A எனும் முகவரியில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு திருமதி ருஷங்கா சமரநாயக்க அவர்களினால் 2016.09.22 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 965 இலக்க ஈட்டு முறியின் கீழுமான வருமதியான கொடுப்பனவில் ஜுவன் பேடிகே ஆனந்த மற்றும் முதுன்கொத் கெதர மேரி நில்மினி ஆகியோர் கடனாளியாக கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதாதலால், மேற்குறிப்பிட்ட வங்கியினால் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம்,

2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை மு. ப. 10.00 மணிக்கு காணி அமைந்திருக்கும் இடத்திலேயே எங்களால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

(பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையின் தீர்மான முடிவுக்காக 2019.06.14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியையும் 2019.08.02 ஆந் திகதிய "தினமின", "டேலி நியூஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்).

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி.**- களனிய பொலிஸ் நிலையத்தின் எதிரில் உள்ள களனிய சிங்ஹாரமுல்ல எம். வீ. பெரேரா ஒழுங்கையினூடாக சுமார் 200 மீற்றர் தூரம் பயணிக்கும் போது, மூலையில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 71/3 என அறியப்படும், களனி நதீ ஆடை

உற்பத்திக் கைத்தொழிற்சாலை அமைந்திருக்கும் இடத்திலேயே இந்த இடம் அமையப் பெற்றிருப்பதோடு, அந்த இடத்திற்கு எளிதில் செல்லலாம்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** உத்தேச கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் 25% ;

(2) உள்ளூராட்சி அதிகார சபைக்கான வரி 1% மற்றும் VAT வரி ;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் விற்பனை விலையில் 2.5%;

(4) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1,500;

(6) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 3,000.

மேலும், மேற்கூறிய கொள்வனவு விலையின் மிகுதியுள்ள 75% வீத பணத்தையும், 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால், ஏற்கனவே செலுத்தியுள்ள 25% வீத பணத்தையும் வங்கி தனதாக்கிக் கொள்ளக்கூடியது மட்டுமன்றி அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு. மேலும் மேற்கூறிய ஏலவிற்பனையை எதுவித முன்னறிவித்தலுமின்றி நிறுத்துவதற்கும் அல்லது இரத்துச் செய்வதற்கும் பூரண அதிகாரம் வங்கிக்கு உண்டு.

உரித்துறுதி, மற்றும் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள: பிரதி முகாமையாளர், (கடன் மற்றும் அறவீடு), பிரதேச அபிவிருத்தி வங்கி, பிரதான அலுவலகம், இல. 933, வெதமுல்ல, களனிய, தொலைபேசி இலக்கங்கள்: 011-2035454, 011-2425262.

இண்டர் எஸ்டேட் ஒக்ஷன்ஸ்,
உரிமம் பெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பீட்டாளர் மற்றும் நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 1099/ 12ஏ, கோதமி வீதி,
பொரல்ல,
கொழும்பு 08,
தொலைபேசி : 011-4329335, 011-4329336, 011-4329337
கையடக்கத் தொலைபேசி : 077-8441812

12-309

## சனச டிவலொப்மன்ட் பேங்க் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க 9 ஆம் பிரிவின் கீழான வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட சட்டம்)

### பகிரங்க ஏலவிற்பனை

**சனச டிவலொப்மன்ட் பேங்க் பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் சமிந்த விராஜ் நிஷாந்த குலசிங்ஹ என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக சனச டிவலொப்மன்ட் பேங்க் பீஎல்சீ சார்பாக மொனராகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ரீ. டபிள்யூ. எஸ். கே. பண்டார என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 09.08.2018 ஆந் திகதிய 5958 ஆம் இலக்க முறியின் மீது சனச டிவலொப்மன்ட் பேங்க் பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்படும் ஆதனம்**

08.01.2021 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், புத்தல வெதிரட்ட கோரளை, புத்தல பிரதேச செயலாளர் பிரிவு பெட்டகம்வெல கிராம அலுவலர் பிரிவு (இ. கி. வ. 525) பெட்டகம்வெல கிராமத்தில் அமைந்துள்ள வெலிஅராவேவத்த, பெட்டகன்வெல ஹேன்யாய மற்றும் கந்துருகஸ்அராவே ஹேன எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டி. சுதத் அருன ரஞ்சன என்பவரால் தயாரிக்கப்பட்ட 08.10.2014 ஆந் திகதிய 1858 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் A காணித்துண்டும் அதனுள்ளடங்கும் வியாபாரக் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும். இது 12.35 பேர்ச்சஸ் பரப்பளவானது.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு 2020.01.06 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2020.01.03 ஆந் திகதிய ''மவ்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப் பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;

(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;

(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/ 2% (நூற்றுக்கு இரண்டரை) ;

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 1,500 ;

(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 3,000.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- "கிளை பிரதானி (கடன் அறவிடுதல் மற்றும் சேகரித்தல்), சனச டிவலொப்மன்ட் பேங்க் பீஎல்சீ, இல. 12, எட்மன்டன் பாதை, கிருலப்பனை, கொழும்பு 06" தொலைபேசி இல. : 011-2832500.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மட,
கண்டி,
தொலைபேசி : 071-4962449, 071-8446374.

12-353

---

**டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க 9 ஆம் பிரிவின் கீழான வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட சட்டம்)

**(டிஎப்சீசீ வங்கியின் பின் உரிமையாளர்) இன் வசிப்பிடத்திற்கு பொருத்தமான சொத்து**

**பகிரங்க ஏலவிற்பனை**

வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவு, தமன்கடுவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பெந்திவெவ எனும் கிராமத்தின் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. பிரேமரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016.10.14 ஆந் திகதிய S/492/14 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 1 (குடியேற்ற அதிகாரியினால் (Colony Officer) தயாரிக்கப்பட்ட லொட் 108B) எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதுமாகும். இது 28.86 பேர்ச்சஸ் பரப்பளவானது.

இவ்வாதனம் உமகிலிய துராகே சோமரத்ன, உமகிலிய துரயலாகே நிரோஷன சன்ஜீவ மற்றும் உமகிலிய துராகே ரோஷன தில்ஷான்த ஆகியோர் கடப்பாடுடையவர்களாக டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ சார்பாக பிரசித்த நொத்தாரிசு சிறிபால ரனதுங்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 24.06.2016 ஆந் திகதிய 3808 ஆம் இலக்க முறியின் மூலம் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

ஆதனத்தை வந்தடைதல்.- பொலன்னறுவை நகரிலிருந்து ஹபரண பாதையில் பெந்தி வெவ பாடசாலை சந்தி வரை வந்து இடது பக்கம் திரும்பி சீதா மாளிகாவ பாதையில் சுமார் 100 மீற்றர் வரை வந்து இடது பக்கம் திரும்பி சுமார் 200 மீற்றர் வரை வரும் போது பாதையின் இறுதியில் அவ்வாதனம் அமைந்துள்ளது.

06.01.2021 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.- 2019.08.23 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2019.08.09 ஆந் திகதிய "திவயின", "த ஐலண்ட்" மற்றும் 2019.08.12 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை**.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) உள்நாட்டு இறைவரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 1,500;
(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 2,000.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- முகாமையாளர் (சட்டப் பிரிவு), டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ, இல. 73, டபிள்யூ. ஏ. டி. இராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02, தொலைபேசி இல. : 011-2371371.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மட,
கண்டி,
தொலைபேசி : 081-2210595, 071-8446374, 071-4962449

12-352

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - கல்கமுவ கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க 9 ஆம் பிரிவின் கீழான வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட சட்டம்)*

### பகிரங்க ஏலவிற்பனை

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம் மற்றும் பதிவுப் பிரிவு, ஹெல்கொட எகொட கோரளை, ஹிரியால ஹத்பத்துவ, கனேவத்த பிரதேச செயலாளர் பிரிவு, இப்பாகமுவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தம்பகல்ல, இல. 445 கிராம அலுவலர் பிரிவில் தம்பகல்லயில் அமைந்துள்ள "பஹலமுகலான மற்றும் வத்துயாய" எனும் காணி, உரிமம்பெற்ற நில அளவையாளர் ஏ. எஸ். கே. பரனகே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.12.25 ஆந் திகதிய 2014/150 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம், பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள் அடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலமாகும். இது, 01 ஏக்கர் 02 றூட் 23.5 பேர்ச்சஸ் பரப்பளவானது.**

*இவ்வாதனம், ஜே. எஸ். டிரேடிங் எனும் பெயர் மகுடத்தின் கீழ் தனி உரிமையாளராக வியாபாரத்தை நடாத்திச் செல்லும் சேனாநாயக்க அமரசிங்ஹ மொஹொட்டி அப்புஹாமிலாகே ஜயவங்ஷ என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம். இவ்வாதனம் 2021.01.12 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

**ஆதனத்தை வந்தடைதல்.**- *குருநாகலையிலிருந்து தம்புள்ளை பாதையில் சுமார் 2 கி. மீ. தூரம் முத்தெட்டுகல சந்தி வரை வந்து இடதுபக்கமாகவுள்ள ஹிரிபிட்டிய பாதைக்குத் திரும்பி அப்பாதையில் சுமார் 18.4 கி. மீ. தூரம் சென்று ஹிரிபிட்டிய குறுக்குப் பாதைச் சந்தியில் இடதுபக்கமாகத் திரும்பி வாரியபொல பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 2.3 கி. மீ. தூரம் சென்று கனேவத்த வரை வந்து வலது பக்கமாகத் திரும்பி கெக்குலாவல பாதையில் சுமார் 05 கி. மீ. தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையின் இடதுபக்கத்தில் தம்பகல்ல சந்தியில் அமைந்துள்ளது.*

*தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.- 2019.04.18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2019.05.06 ஆந் திகதிய "மவ்பிம", "டெயிலி மிரர்" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு முறை.**- *விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப் பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-*

*(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;*

*(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;*

*(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;*

*(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;*

*(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 1,000 ;*

*(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும்.*

*கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.*

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- *"சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" தொலைபேசி இல. : 011-2661835, 011-2661836.*

*ஐ. டபிள்யூ. ஜயசூரிய,*
*நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.*

*இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,*
*லேவெல்ல பாதை,*
*மாவில்மட,*
*கண்டி,*
*தொலைபேசி : 081-2210595, 071-8446374, 071-4962449.*

*12-355*

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - குண்டசாலை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க 4 ஆம் பிரிவின் கீழான வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட சட்டம்)*

### மிகவும் பெறுமதிமிக்க வியாபாரச் சொத்து பகிரங்க ஏலவிற்பனை

**கண்டி மாவட்டத்தில் குண்டசாலை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட நத்தரம்பொத்த 684 கிராம அலுவலர் பிரிவில் நத்தரம்பொத்த கிராமத்தில் அமைந்துள்ள "தம்பகஹவத்த" எனும் காணி, உரிமம்பெற்ற நில அளவையாளர் சீ. டி. ஆதிஹெட்டி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016.01.08 ஆந் திகதிய 5940 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள் அடங்கும் மாடிக் கட்டிடமும், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலமாகும். இது, 27.46 பேர்ச்சஸ் பரப்பளவானது.**

இவ்வாதனம், விஜயகுமார் விநோதினி மற்றும் பாலசந்திரன் செந்தில்குமார் ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம். இவ்வாதனம் 2021.01.12 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்தை வந்தடைதல்.-** கண்டி நகர மத்தியிலிருந்து மஹியங்கனை பாதையில் சுமார் 4.25 கி. மீ. தூரம் நத்தரம்பொத அரங்கல பாதை சந்தி வரை வந்து இடதுபக்கமாகத் திரும்பி மெனிக்ஹின்ன 626 ஆம் பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 50 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் வலதுபக்கத்தில் பாதையின் எல்லையில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.- 2018.07.06 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2018.07.13 ஆந் திகதிய ''லக்பிம'', ''டெயிலி மிரர்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப் பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/ 2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ;
(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 2,000.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.-** ''சிரேஷ்ட முகாமையாளர் (வர்த்தக அறவிடுதல் பிரிவு), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10'' தொலைபேசி இல. : 011-2661835, 011-2661836.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 369/ 1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மட,
கண்டி,
தொலைபேசி : 081-2210595, 071-8446374, 071-4962449.

12-354

### ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க 9 ஆம் பிரிவின் கீழான வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட சட்டம்)*

**பகிரங்க ஏலவிற்பனை**

**ஆதனத்தின் விபரம்.- சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள கொலன்ன பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் உல்லிடுவெவ கிராம அலுவலர் பிரிவு, இலக்கம் 219 இல் உள்ள கொலன்ன பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட கொலன்ன கோறளயின் கொலன்ன கம்பட்டுவ DRO பிரிவில் உள்ள ஜயதுங்கண்ட மறுபெயர் ஜயதுங்கண்ட கிராமத்தில் உள்ள கொடக்லேதொல முக்கவத்த என அழைக்கப்படும் காணி, தற்போது அப்பே ரொக் எஸ்ட்டேட் காணித்துண்டு உரிமம்பெற்ற நில அளவையாளர் ஐ. கொட்டம்பகேயினால் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2009, சனவரி 10 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 06 குறிக்கப்பட்ட 50 ஏக்கர் பரப்பளவான காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மற்றும் சகலதுமாகும்.**

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் தம்பெல்ல கமச்சிகே இசுரு இஷான் கடப்பாடு உடையவராக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பாக மாத்தறை பிரசித்த நொத்தாரிசு ஆர். பீ. கே. ராஜபக்சவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.07.30 ஆந் திகதியிடப்பட்ட 18 ஆம் இலக்க, 2018.01.30 ஆந் திகதியிடப்பட்ட 276 ஆம் இலக்க முறியின் மீது நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள் அமைந்துள்ள அதே இடத்தில் 2021.01.04 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்தை வந்தடைதல்.-** டெனியாய விகாரைப் பாதையில் இருந்து செலோ கந்த பாதையில் 7 கி.மீ. தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையின் முடிவில் அமைந்துள்ளது.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.- 2020.02.28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2020.03.12 ஆந் திகதிய ''மவ்பிம'', ''டெயிலி மிரர்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப் பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;

(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/ 2% (நூற்றுக்கு இரண்டரை) ;

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 1,500;

(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 2,000.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- "சிரேஷ்ட முகாமையாளர் (வணிக அறவிடுதல் பிரிவு), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" தொலைபேசி இல. : 011-2661835, 011-2661836.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 369/ 1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மட,
கண்டி,
தொலைபேசி : 081-2310595, 071-8446374, 071-4962449.

12-347

---

### சனச டிவலொப்மன்ட் பேங்க் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க 4 ஆம் பிரிவின் கீழான வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட சட்டம்)

#### பகிரங்க ஏலவிற்பனை

**தென் மாகாணம், காலி மாவட்டம், வெல்லபடபத்து, அம்பலங்கொடை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் நகர சபை எல்லைக்குட்பட்ட பட்டம்பெந்திமுல்ல, இல. 85, கிராம அலுவலர் பிரிவில் பட்டம்பெந்திமுல்ல கிராமத்தில் மகா வீதியில் அமைந்துள்ள வரிப்பண இல. 366 கொண்ட பிட்டியேவத்த பன்னிரண்டில் ஒரு பகுதியில் மூன்றில் ஒரு பகுதி எனும் மஹகெதரவத்த எனும் காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் ஆர். எம். சந்திரபால என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016.12.10 ஆந் திகதிய 2216 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் B1, B2, C11, C21, C31, C32 மற்றும் D என அடையாளமிடப்பட்ட காணித்துண்டுகளும் அதனுள்ளடங்கும் மற்றும் சகலதுமாகும். இது, 9.302 பேர்ச்சஸ் பரப்பளவானது.**

சனச டிவலொப்மன்ட் பேங்க் பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் லொகு கங்கானம்கே பிரதீப் அமேந்திர பீரிஸ் என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக சனச டிவலொப்மன்ட் பேங்க் பீஎல்சீ சார்பாக காலியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பீ. ரனோஜனி யூ. கமகே என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.04.06 ஆந் திகதிய 1803 ஆம் இலக்க முறியின் மீது சனச டிவலொப்மன்ட் பேங்க் பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 2021.01.04 ஆந் திகதி பி. ப. 3.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- கொழும்பு நகரத்திலிருந்து காலி பாதையில் சுமார் 84 கி. மீ. தூரம் சென்று அம்பலங்கொடை நகரம் (பழைய பாதை சந்தி) வரை வந்து வலதுபக்கமாகத் திரும்பி பழைய பாதை (பிரதான வீதி) ஊடாக சுமார் 200 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையின் இடதுபக்கத்தில் அமைந்துள்ளது.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.- 2019.09.06 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2019.08.29 ஆந் திகதிய "மவ்பிம", "த ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;

(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;

(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/ 2% (நூற்றுக்கு இரண்டரை) ;

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 1,500 ;

(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 2,000.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- "கிளை பிரதானி (கடன் அறவிடுதல் மற்றும் சேகரித்தல்), சனச டிவலொப்மன்ட் பேங்க் பீஎல்சீ, இல. 12, எட்மன்டன் பாதை, கிருலப்பனை, கொழும்பு 06" தொலைபேசி இல. : 011-2832500.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மட,
கண்டி,
தொலைபேசி : 071-4962449, 071-8446374.

12-348

---

**டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ**

(டீஎவ்சீசீ வர்தன வங்கியின் பின் உரிமையாளர்)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க 9 ஆம் பிரிவின் கீழான வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட சட்டம்)

**பகிரங்க ஏலவிற்பனை**

**வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவு, தமன்கடுவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 172, தோப்பாவெவ கிராம அலுவலர் பிரிவு, தோப்பாவெவ கிராமத்தில் அமைந்துள்ள "காலேவத்த" எனும் காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் டி. முதுன்கொத்கே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003.02.21 ஆந் திகதிய 1669 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 01 மற்றும் 02 குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள் அடங்கும் மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது, லொட் 01 - 18.22 பேர்ச்சஸ், லொட் 02 - 2.2 பேர்ச்சஸ் பரப்பளவானது.**

டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பொலன்னறுவையில் தனது பதிவு அலுவலகம் அமைந்துள்ள சஞ்சீவ ரைஸ் புரொடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் பணிப்பாளர்களான உமகலிய துரகே சோமரத்ன, உமகலிய துரகே ரோஷன தில்ஷான்த மற்றும் உடவெல மாலனி ஜயந்தி ஆகியோர் கடப்பாடுடையவர்களாக டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ சார்பாக பிரசித்த நொத்தாரிசு சிரிபால ரனதுங்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 3402, 3404, 3406 மற்றும் 3408 ஆம் இலக்க முறிகளின் மூலம் டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்டுள்ள கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்கள் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

முதலாம் விற்பனை 2021.01.06 ஆந் திகதி பி. ப. 1.00 மணிக்கு நடைபெறும்.

**ஆதனத்தை வந்தடைதல்**.- கதுறுவெல நகரில் இருந்து ஹபரண பாதையில் 2 ஆம் எல சந்தி வரை வந்து இடது பக்கம் திரும்பி 2 ஆம் எல பாதையில் இடது பக்கம் இவ்வாதனம் அமைந்துள்ளது.

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பல்லேபத்துவ, தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவு, தெஹிவளை-கல்கிஸ்ஸ மாநகர சபை எல்லைக்குட்பட்ட இல. 537A, துட்டுகெமுனு வீதி கிராம அலுவலர் பிரிவு, கலுபோவில இந்திரா மாவத்தையில் மாரகஹவத்த, கஹட்டகஹவத்த, பதுல்லகஹவத்த மற்றும் கொஹிலவலலந்த என அழைக்கப்படும் காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் ஏ. டபிள்யூ. கார்வல்ஹோ (A. W. Carvallo) என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007.12.07 ஆந் திகதிய 158/2007 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 4A என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள் அடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது, 9.30 பேர்ச்சஸ் பரப்பளவானது.**

இரண்டாம் விற்பனை 2021.01.05 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும்.

**ஆதனத்தை வந்தடைதல்**.- High Level பாதையில் நுகேகொட சந்தியிலிருந்து 500m வரை வந்து கலுபோவில சந்தியில் வலது பக்கம் திரும்பி துட்டுகெமுனு பாதையில் 700m வரை வந்து வலதுபக்கம் இந்திரா மாவத்தை திரும்பி அப்பாதையில் 200m சென்று இடதுபக்கம் திரும்பி 25m செல்லும்போது அப்பாதை இறுதியில் வரிப்பணம் (70/18, Indra Mawatha) இவ்வாதனம் அமைந்துள்ளது.

**தென் மாகாணம், காலி மாவட்டம், காலி நான்கு கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், காலி மாநகர சபை எல்லைக்குட்பட்ட 96B, கல்வடுகொட கிராம அலுவலர் பிரிவில் கும்பல்வெல்ல ரிச்மன்ட் கந்த பாதையில் அமைந்துள்ள வரிப்பண இல. 200B கொண்ட முலேவத்த அல்லது கஹட்டகஹவத்த அல்லது பதுல்லகஹவத்த லொட் 06/07 அல்லது உடுகம்பலகேவத்த இணைந்த காணித்துண்டுகளின் மீளளவையின் ஒன்றிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற நில அளவையாளர் ஜே. சேதுங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1971.11.05 ஆந் திகதிய 947 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 03 இன் மீளளவையான உரிமம்பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. டபிள்யூ. எல். எல். காமினி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015.06.26 ஆந் திகதிய 2271 ஆம் இலக்க வரைபடத்தின் லொட் 1 என குறிக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள் அடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். இது, 20.50 பேர்ச்சஸ் பரப்பளவானது.**

மூன்றாம் விற்பனை 2021.01.04 ஆந் திகதி பி. ப. 1.30 மணிக்கு நடைபெறும்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- காலி-கொழும்பு பாதையில் கலுவெல சந்தி வரை வலது பக்கம் திரும்பி 2km வரை வந்து கெக்குனகொட சந்தியில் இருந்து 25m செல்லும்போது அப்பாதையில் வலது பக்கம் (மாகம வேதமாத்தியாகே இடத்துக்கு முன் பக்கம்) இவ்வாதனம் அமைந்துள்ளது.

*தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.- 2019.08.23 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2019.08.09 ஆந் திகதிய "திவயின", "த ஐலண்ட்" மற்றும் 2019.08.12 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப் பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;

(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;

(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) மற்றும் அதற்கான வரி ;

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 1,500 ;

(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 2,000.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- "முகாமையாளர்-சட்டப் பிரிவு, டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ, இல. 73, டபிள்யூ. ஏ. டி. இராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02" தொலைபேசி இல. : 011-2371371.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மட,
கண்டி,
தொலைபேசி : 081-2210595, 071-8446374, 071-4962449.

12-349

**மக்கள் வங்கி-கந்தளாய் கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டீ ஆம் பிரிவின்கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை**

**கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், கந்தளாய் பிரதேச சபை எல்லைகளுக்கு உட்பட்ட, கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவில், வென்ட்ரசன்புர கிராம அலுவலர் பிரிவில், கந்தளாய் 92 ஆம் மைல் கல் சந்தி, ஆர்/ 30/ 2 ஆம் வட்டாரம் என்ற இடத்தில் அமைந்துள்ள அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் திரு. செல்லப்பிள்ளை அவர்களால் வரையப்பட்ட 2003 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதியிடப்பட்ட 3504 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு-**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 0பே.)**

**அதிலுள்ள கட்டிடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக.**

**மேலே கூறப்பட்ட காணி பின்வரும் காணியின் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நில அளவை மூலம் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.**

**கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், கந்தளாய் பற்று, கந்தளாய் பிரதேச சபை எல்லைகளுக்கு உட்பட்ட கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவில், வென்ட்ரசன்புர கிராம அலுவலர் பிரிவில், கந்தளாய் கிராமத்தில் அமைந்துள்ள 'கந்தளாய்' என அழைக்கப்படும் காணி. காணியின் விஸ்தீரணம் (0ஏ. 1றூ. 0பே.) மற்றும் அதிலுள்ள கட்டிடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக திருகோணமலை காணிப்பதிவகத்தில் இணைப் பக்கம் இல. LDO/P/12/53 மற்றும் LDO/P/20/182 இன்கீழ் பதிவுசெய்யப்பட்ட காணித்துண்டு.**

*மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை மக்கள் வங்கியின் கந்தளாய் கிளை வளாகத்தில் மு. ப. 11.00 மணிக்கு எம்மால் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.*

*சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID-19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் இந்த ஏலவிற்பனை நடைபெறும்.*

**காணியைச் சென்றடைவதற்கான வழி.-** கந்தளாய் மக்கள் வங்கியிலிருந்து 1.3 கிலோ மீற்றர் கந்தளாய் பிரதான வீதியில் கந்தளாய் மணிக்கூட்டுக் கோபுரம் சந்தி வரை செல்லவும். அங்கிருந்து கண்டி வீதிக்குத் திரும்பி சுமார் 3.7 கிலோ மீற்றர் வரை செல்லும்போது குறித்த சொத்து பாதையின் இடதுபக்கமாக 164/ 5 ஆம் கல்வெட்டைத் தாண்டும்போது அமைந்திருக்கின்றது.

**தீர்மான அறிவித்தலுக்கு.-** தீர்மான அறிவித்தலுக்கு தயவு செய்து 2019, ஏப்பிறல் 05 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2019, மாச்சு 18 ஆந் திகதிய "டெயிலி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகத் தனித்தனியாகத முழுமையாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி, விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும் ;
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 1,500 ரூபா ;
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும் ;
(6) முத்திரைக் கட்டணம் மற்றும் விற்பனைச் சான்றிதழுக்கான நொத்தாரிசுக் கட்டணம்.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் "முகாமையாளர், மக்கள் வங்கி, கந்தளாய் கிளை" என்ற முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை பறிமுதல் செய்வதற்கும், உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் "முகாமையாளர், மக்கள் வங்கி, கந்தளாய் கிளை" என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. : 026-2234548, 026-2234231.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது."

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,
129 வருட கால மகோன்னத
சேவை.

| தலைமை அலுவலகம் | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, | 6A, பெயார்பீல்ட் கார்ட்ன், |
| கண்டி. | கொழும்பு. |
| தொலைபேசி : | தொலைபேசி : |
| 081-2227593 | 011-2671467 |
| | 011-2671468 |
| தொ.பே./ ஃபக்ஸ் : | தொ.பே./ ஃபக்ஸ் : |
| 081-2224371 | 011-2671469 |
| மின்-அஞ்சல் : | மின்-அஞ்சல் : |
| schokmankandy@sltnet.lk | schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

12-399